පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංක - 181

ජාතික ඖෂධ නියාමන අධිකාරිය

පාර්ලිමේන්තුවේ පොදු ව්‍යාපාර පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද
වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග 120(4) යටතේ ගරු අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ
හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම

பாராளுமன்ற வெளியீட்டு தொடர் இல - 181

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை

பாராளுமன்ற பொது முயற்சிகள் குழுவினால் முன் வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியல் கட்டளை இலக்கம் 120(4) இன் கீழ் கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்

Parliamentary Series Number – 181

National Medicines Regulatory Authority

Submission of observations of the Hon. Minister in charge of the institutions and steps taken with regard to the reports tabled by the Committee on Public Enterprises in terms of Standing Order No. 120(4)

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல. 181

நிறுவனம் - தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரபை

கமிட்டியின் வழிகாட்டுதல்/பரிந்துரை	பரிந்துரைகள்/வழிகாட்டுதல்களை நடைமுறைப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்
1.2 உள்ளக கணக்காய்வு நிறுவனத்திற்கு ஒரு உள்ளக கணக்காய்வாளரை கூடிய விரைவில் நியமிக்க நடவடிக்கை எடுத்தல் மற்றும் இது குறித்த அறிக்கையை **<u>01 மாதத்திற்குள்</u>** குழுவிடம் சமர்ப்பித்து அதன் பிரதிகளை கணக்காய் வாளர் நாயகத்திடம் சமர்ப்பித்தல் வேண்டும்.	தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையினால் முறையான நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டு, அதிக புள்ளிகள் பெற்ற விண்ணப்பதாரருக்கு 2025.03.05 ஆம் திகதியன்று நியமனக் கடிதம் வழங்கப்பட்டது. இருப்பினும், நியமனத்தை ஏற்றுக்கொண்ட பின்னர், அவர் தனது தனிப்பட்ட காரணங்களுக்காக 2025.03.11 ஆம் திகதியன்று அந்த நியமனத்தை ராஜினாமா செய்தார். அதன் பின்னர், இரண்டாம் இடத்தைப் பெற்ற விண்ணப்பதாரருக்கு நியமனம் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டாலும் அவரும் நியமனத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என தெரிவித்தார். தற்போது, சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு பதில் அடிப்படையில் இந்த பதவிக்கு ஒரு அதிகாரியை நியமித்துள்ளது. நிரந்தர அடிப்படையில் உள்ளக கணக்காய்வாளர் ஒருவரை அவசரமாக ஆட்சேர்ப்பு செய்வதற்கான ஒரு பத்திரிகை விளம்பரம் மீண்டும் வெளியிடப்பட்டு அதற்கான விண்ணப்பங்களும் பெறப்பட்டுள்ளன. அதன்படி, ஆட்சேர்ப்பு செய்வது தொடர்பான மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
1.3 2025 ஜனவாரி 26 ஆம் திகதியில் உள்ளவாறு பணியாளர் எண்ணிக்கை. i. நிறுவனத்திற்குள் உள்ளக பதவி உயர்வுகளை மேற்கொள்வதில் உள்ள சிக்கல்கள் குறித்து முகாமைத் துவ சேவைகள் திணைக்களத்துடன் கலந்துரையாடி சரியான வழிமுறையை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	உள்ளக பதவி உயர்வுகள் குறித்த பிரச்சினைகள் தொடர்பாக 2025.05.26 ஆம் திகதியன்று முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் தலைமையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது, அங்கு தற்போது நிலவும் பிரச்சினைகள் அடையாளம் காணப்பட்டன. இது தொடர்பில் பொருத்தமான வழிமுறை மற்றும் முன்மொழிவு ஒன்றை தயாரித்து முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

ii. இதுவரை ஆட்சேர்ப்பு திட்டங்கள் (SOR) தயாரிக்கப்படாத பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு திட்டங்களைத் தயாரித்து, தேவையான ஒப்புதல் களுக்காக அவற்றை சமர்ப்பித்தல் மற்றும் இந்த விடயங்கள் குறித்த அறிக்கையை <u>**01 மாதத்திற்குள்**</u> குழுவிடம் நாயகத்திடம் சமர்ப்பித்தல் வேண்டும்.	i. தொழில்நுட்ப அலுவலர் (சிவில்) பதவிக்கான ஆட்சேர்ப்பு திட்டம் சுகாதார அமைச்சினால் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதிக்காக 2025.04.01 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டு, 2025.05.02 ஆம் திகதியன்று அதற்கான அனுமதியும் பெறப்பட்டது. ii. கிரயக் கணக்காளர் (Cost Accountant) பதவிக்கான ஆட்சேர்ப்பு திட்டம் தயாரிக்கப்பட்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. iii. தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில், சிரேஷ்ட முகாமைத்துவ சேவைப் பிரிவைச் சேர்ந்த பணிப்பாளர் பதவிகளுக்கான ஆட்சேர்ப்புத் திட்டம் சுகாதார அமைச்சினால் 2025.03.13 ஆம் திகதியன்று முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டு, 2025.05.02 ஆம் திகதியன்று அதற்கான ஒப்புதலும் பெறப்பட்டது. iv. மற்றைய பதவிகளுக்கான ஆட்சேர்ப்புத் திட்டங்கள் ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்டுள்ளன.
iii முதல்நிலைப் பிரிவில் உள்ள பதவிகளுக்கான பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்வது தொடர்பான பிரச்சனை ஒட்டுமொத்த பொதுச் சேவையையும் பாதிக்கும் என்பதால், இதனைக் கருத்தில் கொண்டு, முதல்நிலைப் பிரிவில் உள்ள பதவிகளுக்கான பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான புதுப்பிக்கப்பட்ட வழிமுறையைத் தயாரிப்பதற்குத் தேவையான முன்மொழிவுகளை அரசாங்கத்திற்கு சமர்ப்பிக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். மேலும், இந்த விடயங்கள் குறித்த அறிக்கையை <u>**01 மாதத்திற்குள்**</u> குழுவிடம் சமர்ப்பித்து அதன் பிரதிகளை கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பித்தல் வேண்டும்.	முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பரிந்துரை.
02. சட்டத்தின் விதிகளுக்கு இணங்காதது. (அ) 2015 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை சட்டத்தின் உட்பிரிவு 14 (A) க்கு இணங்க, மருந்துகள் மற்றும் மருந்துப் பொருட்களின் தேவை மற்றும் அளவு குறித்த தரவுகளைச் சேகரிப்பதற்கும் நாட்டில் மருந்துகளின்	இலங்கை சுங்கத் திணைக்களத்தினால் விடுவிக்கப்படும் (cleared) அனைத்து மருந்துகளின் அளவு மற்றும் விலைகள் தொடர்பான முழுமையான தரவுகளை சேகரிக்கும் பணி ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நாட்டில் கிடைக்கும் மருந்துகளில் பெரும்பாலானவை இறக்குமதி செய்யப்படும் மருந்துகளாகும், மற்றைய மருந்துகள் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்றன. அதைவிட ஒரு சிறிய அளவிலான

கிடைக்கும் தன்மையை ஒழுங்குபடுத்துவதற்கும் முன்மொழிவுகளைத் தயாரித்தல்.	மருந்துகள் நன்கொடைகளாகப் பெறப்படுகின்றன. மேலும், சில மருந்துகள் சட்டவிரோதமான வழிகளில் பிற நாடுகளிலிருந்து இலங்கைக்குக் கொண்டுவரப்படும் சம்பவங்களும் உள்ளன. மருத்து விநியோகப் பிரிவினால் மேற்கொள்ளப்படும் மதிப்பீடுகளின் அடிப்படையில் மருந்துகள் இறக்குமதி செய்யப்பட்டு உள்நாட்டில் அரச துறைக்கு வழங்கப்படுகின்றன. தனியார் துறையில் கிடைக்கும் மருந்துகளின் வகைகள் மற்றும் அளவுகள் இறக்குமதி செய்யப்பட்டு உள்நாட்டில் விநியோகிக்கப்படும் மருந்துகளின் பரிந்துரை மற்றும் பயன்பாட்டைப சார்ந்துள்ளது. எனவே, இந்த இரண்டு சூழ்நிலைகளும் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டவையாகும். எவ்வாறாயினும், சில மருந்துகளுக்கு பதிவுசெய்யப்பட்ட விநியோகஸ்தர்கள் இல்லாத சந்தர்ப்பங்களில் அல்லது பதிவுசெய்யப்பட்ட விநியோகஸ்தர்கள் விலைமனுக்களை சமர்ப்பிக்காத சந்தர்ப்பங்களில், அத்தகைய மருந்துகளுக்கு நாட்டில் பற்றாக்குறை ஏற்படும். இது தொடர்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய பொருத்தமான மாற்று நடவடிக்கையாக, அரச மருந்துக் கூட்டுத்தாபனம், அத்தகைய தெரிவு செய்யப்பட்ட மருந்துகளை நேரடியாக நாட்டிற்கு இறக்குமதி செய்து, உள்ளூர் உற்பத்தியாளர்கள் அந்த தெரிவு செய்யப்பட்ட மருந்துகளை உற்பத்தி செய்ய உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதும் பொருத்தமானதாகும். தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை, அத்தகைய மருந்து விநியோகஸ்தர்களை ஊக்குவிக்கும் வகையில், சிறிய அளவில் நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படும் மருந்துகளை பதிவு செய்வதற்கு கட்டணம் வசூலிக்காமல் இருக்க நடவடிக்கை எடுத்துள்ளது. சட்டவிரோதமான முறையில் இலங்கைக்கு கொண்டு வரப்படும் மருந்துகள் மருந்தகங்களில் விற்பனை செய்யப்படுகிறதா என்பதை கண்டறியும் நோக்கில் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை சோதனைகளை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளது. இதற்காக கடந்த மாதம் 10 உதவி மருந்து பரிசோதகர்கள் (Assistant Drug Inspectors) பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். Asykuda முறைமையைப் (Asykuda System) பயன்படுத்தி Cusdec எண் மூலம் தரவு சேகரிக்கப்படுகிறது. ஆனால் அளவு பதிவு செய்யப்படவில்லை
(ஆ) மருந்துகளின் விலையை ஒழுங்குபடுத்துவதற்கு, பிராந்திய விலைகளைக் கருத்தில் கொண்டு விலை சூத்திரத்தை உருவாக்க உடனடி நடவடிக்கை	தற்போது, விலைச் சூத்திரம் தயாரிக்கப்பட்டு அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது. விதிக்கப்பட்ட தடை உத்தரவு நீக்கப்பட்டுள்ளது. .

எடுத்தல்.உ மேலும், இது குறித்த அறிக்கை (மருந்துகளுக்கான பரிந்துரைக்கப்பட்ட குறைந்தபட்ச விலைகள் குறித்து பொதுமக்களுக்குத் தெரிவிக்கும் பொருத்தமான முன்மொழிவு உட்பட) 2025 ஏப்ரல் 12 க்கு முன்னர் கணக்காய்வாளர் நாயகத்திற்கு ஒரு பிரதியுடன் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.	
(இ) வாசனை திரவியங்கள் மற்றும் ஊட்டச்சத்து துணைப்பொருள்கள் (Nutritional Supplements) போன்ற பிற தயாரிப்புகளின் மதிப்பீடு தொடர்பான வழிகாட்டு தல்களை கூடிய விரைவில் உருவாக்க தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் இது தொடர்பான முன்னேற்றத்தை<u>03 மாதங்களுக்குள்</u> கணக்காய்வாளர் நாயகத்திற்கு ஒரு பிரதியுடன் குழுவிடம் சமர்ப்பிக்கப் படுதல் வேண்டும்.	அந்த பரிந்துரையின்படி, வாசனை திரவியங்களை ஒழுங்குபடுத்துவது தொடர்பாக சுகாதார அமைச்சு மற்றும் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை இடையே நடந்த கலந்துரையாடலின் பின்னர், புதிய அமைச்சரவையின் ஒப்புதலுடன் புதிய குழுவை நியமித்து, வாசனை திரவியங்களை ஒழுங்குபடுத்தும் பணியை தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் கீழ் கொண்டு வரவும் முடிவு செய்யப்பட்டது. அதன்படி, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் குழு நியமிக்கப்பட்டு, குழுவின் முதல் கூட்டம் 2025.08.01 ஆம் திகதி அன்று நடைபெற்றது. அதன்படி, வாசனை திரவியங்கள் மற்றும் ஊட்டச்சத்து துணைப்பொருள்கள் போன்ற பிற தயாரிப்பு களை மதிப்பீடு செய்வதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.
(ஈ) சட்டத்தின் துணைப் பிரிவுகள் 72(4) மற்றும் 93(4) ஆகியவற்றின் அடிப்படையில் மருத்துவ சாதனங்கள் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட தயாரிப்புகள் குறித்த மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கான குறிப்பிட்ட கால வரம்புகள் உட்பட, பின்பற்றப்பட வேண்டிய நடை முறைகளைக் குறிப்பிடும் நல்ல உற்பத்தி நடைமுறை வழிகாட்டுதல்கள் மற்றும் பிற பொருந்தக்கூடிய வழிகாட்டுதல்களையும் அமுல்படுத்துவதற்கான ஒழுங்குவிதிமுறைகள் உருவாக்கப்பட வேண்டியிருந் தாலும், அதன்படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதை குழு அவதானித்ததோடு இது தொடர்பாக தலையீடு செய்யுமாறு குழு பரிந்துரைத்துள்ளது.	மருத்துவ சாதனங்கள் குறித்த வழிகாட்டுதல்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. மட்டுப்படுத்தப்பட்ட தயாரிப்புகளுக்கு பொருந்தக்கூடிய ஒழுங்குபடுத்தல் செயல்முறை புதிய ஒழுங்குபடுத்தல் செயல்முறைகளை உள்ளடக்கியதாக இணையதளம் (website) புதுப்பிக்கப்பட்டுள்ளது. அதற்கான வழிகாட்டுதல்கள் தயாரிக்கப்பட்டு பொது மக்களுக்கு வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(உ) சட்டத்தின் துணைப்பிரிவுகள் 74(1) மற்றும் 95(1) இன் கீழ் பதிவுசெய்யப்பட்ட அனுமதிக்கப்பட்ட மருத்துவ சாதனங்கள் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட தயாரிப்புகள் அவ்வப்போது அமைச்சரால் பட்டிய லிடப்பட வேண்டியிருந்தாலும், அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படவில்லை. உரிய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடுவதை மீள்பரிசீலனை செய்து மேற்படி பட்டியல்களை விரை வாக வெளியிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல்.	தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையினால் பதிவுகளை வழங்குவதில் ஏற்பட்ட காலதாமதத்தால் ஏற்படும் கடுமையான சூழ்நிலையைத் தவிர்க்கும் வகையில் பதிவுப் பணிகள் துரிதப்படுத்தப்பட்டன. எனவே, வர்த்தமானிகளை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டாலும், 74(1) மற்றும் 95(1) ஆகிய துணைப்பிரிவுகளின்படி, அடுத்த 3 மாதங்களுக்குள் உரிய வர்த்தமானி அறிவித்தல்கள் வெளியிடப்படும். பதிவுசெய்யப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட பொருட்களின் பட்டியல் இணையதளத்தில் வெளியிடப்பட்டு மருத்துவ சாதனங்களின் பட்டியலைத் தயாரித்து வெளியிட தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.
(ஊ) சட்டத்தின் துணைப் பிரிவுகள் 83(6) மற்றும் 102(6) ஆகியவற்றின் அடிப்படையில் மருத்துவ சாதனங்கள் மற்றும் வரையறுக்கப்பட்ட பொருட்கள் மதிப்பீட்டுக் குழுக்கள் மற்றும் தேசிய மருந்துகள் தர உறுதி ஆய்வுகூடம் ஆகியவற்றினால் சோதனை அல்லது மதிப்பீட்டுச் செயல்முறையை நடத்துவதில் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள், அத்தகைய செயல்முறைக்கான கால வரம்புகள், மதிப்பீட்டுக் குழு அதன் கூட்டங்களை நடத்தும் விதம் மற்றும் அத்த கைய கூட்டங்களில் பின்பற்றப்பட வேண்டிய நடை முறைகள் மற்றும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய விடயங் கள் மற்றும் அறிக்கைகளில் சேர்க்கப்பட வேண்டிய விடயங்கள் ஆகியவற்றைக் குறிப்பிட்டு அமைச்சர் விதிமுறைகளை உருவாக்கியிருக்க வேண்டியிருந் தாலும், அதற்கேற்ப எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை என்பதைக் குழு அவதானித்து தொடர்புடைய பணிகளை முடிக்குமாறு குழு பரிந்துரைத்தது.	இல. 385, "சுவாசிரிபாய" கட்டிடத்தில் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையினை நிறுவுதல்" என்ற தலைப்பில் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திர இல.24/0417/640/007 இன் பரிந்துரைகளின்படி, சுவாசிரிபாய கட்டிடத்தைப் புதுப்பிப்பதற்கும் மற்றும் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் ஆய்வுகூடத்தின் வசதிகளை மேம்படுத்துவதற்காகவும் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் நிதியிலிருந்து 01 பில்லியன் ரூபாய்களை வழங்குவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. தற்போது ஆய்வுகூட மேற்கூரையை சீரமைக்கும் பணி இறுதி கட்டத்தில் உள்ளது. இதர புனரமைப்பு பணிகளுக்குத் தொடர்புடைய நிபுணத்துவம் வாய்ந்த பிரதிநிதி ஒருவரை நியமிக்க தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளருடன் (கொள்வனவு) இதுபற்றி கலந்துரையாடப்பட்டதுடன் வடிவமைப்பு மற்றும் கட்டுமான முறையின்படி (Design and Build method.) இதனை மேற்கொள்வது மிகவும் பொருத்தமானது என்று தீர்மானிக்கப் பட்டது. அதன்படி, விலைமனுக்கள் கோரப்பட்டு, இது தொடர்பாக எதிர்கால கொள்வனவு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

(எ) சட்டத்தின் பிரிவுகள் 84(2), 85,103(2) மற்றும் 104 இன் படி, மருத்துவ சாதனங்கள் மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட பொருட்களைப் பதிவு செய்தல் மற்றும் பதிவு நிராகரிக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் வர்த்தமானியில் வெளியிடப்படும் விதிமுறைகள் மூலம் இதுவரை பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட வில்லை. 2019 அக்டோபர் 09 ஆம் திகதிய 2144/20 எனும் இலக்க அதி விஷேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. அதன் பின்னர் அதன் படி எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பதிவு மற்றும் பதிவு மறுப்பு தொடர்பான நிகழ்வுகள் குறித்து வர்த்தமானியில் அறிவிக்கப்பட வேண்டிய விதிமுறைகள் மூலம் பொதுமக்களுக்குத் தெரிவிப்பதற்கான நடவடிக்கைகளை ஆய்வு செய்தல்.	மருத்துவ சாதனங்கள் மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட பொருட்களின் பதிவு இணையதளத்தில் வெளியிடப்பட்டு, நிராகரிப்புகள் தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து கவனம் செலுத்தப்படுகின்றது.
3.1 கொள்முதல் தரவு முறைமையை தானியங்கி மயமாக்குவதற்கான (e-NMRA automation) முறைமை I. இந்த தரவுத்தளம் தொடர்பாக எதிர்காலத்தில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள், தொடர்புடைய நிறுவனத்தைத் தேர்ந்தெடுப்பதில் எதிர்கொள்ளப்பட்ட சிக்கல்கள் மற்றும் இதற்காக செலவிடப்பட்ட பணத்தை மீட்டெடுப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து ஒரு நிறுவன ரீதியான விசாரணை நடத்தப்பட்டிருந்தால், எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து கணக்காய்வாளர் நாயகத்திற்கு பிரதிகளுடன் குறித்த **<u>அறிக்கையை 01 மாதத்திற்குள்</u>** குழுவிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.	தற்போது, பெறுகை தரவுத் தளத்தின் (e-NMRA Automation) தன்னியக்கமாக்கல் தொடர்பாக ஒரு விசாரணை அதிகாரியால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன, மேலும் செலவழித்த தொகையை மீட்பதற்கு தேவையான சட்ட நடவடிக்கைகள் எடுப்பது குறித்து ஆலோசனை கோரி தயாரிக்கப்பட்ட கடிதம் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

II..இந்தத் தரவுத்தளத்திலிருந்து நீக்கப்பட்ட நிறுவனங்களின் பெயர்பட்டியல் மற்றும் அந்த நிறுவனங்கள் கோரிய மருந்து வகைகள் குறித்த அறிக்கையை கணக்காய்வாளர் நாயகத்திற்கு பிரதிகளுடன் குழு விடம் சமர்ப்பித்தல் வேண்டும்	e-NMRA தரவுத்தளத்திலிருந்து நீக்கப்பட்ட நிறுவனங்களால் கோரப்பட்ட மருந்துகளின் வகைகள் குறித்த அறிக்கை, 2025.06.12 ஆம் திகதிய CA/AQ/FCC02/COPE/NMRA/2025(II) எனும் இலக்க எனது பதில் அறிக்கையின் இணைப்பு 08 மூலம் பொது நிறுவனங்கள் குழுவின் செயலாளர் மற்றும் கணக்காய்வாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.
III. இந்த தரவுத்தளத்தின் பணிகள் டிஜிட்டல் பொருளாதார அமைச்சின் அறிவுறுத்தல்களின்படி மேற்கொள்ளப்படும்.	இது தொடர்பாக ஆலோசனைகளைக் கோரி டிஜிட்டல் பொருளாதார அமைசசிற்கு ஒரு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது .
3.2 மருந்துகள் தரவுத்தளத்தை மறுசீரமைத்தல் (Revamping the Medicine Database) I. மருத்துவத் தரவுத்தளத்தை மறுசீரமைத்த பின்னர் அதற்காக ரூ.4,774,752 பணம் செலுத்துவதற்கு நிறுவனம்சார் அங்கீகாரம் வழங்கிய அதிகாரிகள் மீது முறையான விசாரணை நடத்தி, குறிப்பிட்ட பரிந்துரைகளுடன் (01 மாதத்திற்குள் விசாரணையைத் தொடங்குதல்) **02 மாதங்களுக்குள் இடைக்கால அறிக்கையை** கணக்காய்வாளர் நாயகத்திற்கு பிரதிகளுடன் குழு விடம் சமர்ப்பித்தல்.	மருந்துகள் தரவுத்தளத்தை மறுசீரமைப்பது(Revamping of the Medicines Database) தொடர்பாக பொது நிறுவனங்களுக்கான குழுவின் பரிந்துரைகளை உள்ளடக்கியதாக விசாரணை ஒன்று நடத்தப்பட்டு வருகிறது.
II.இந்தத் தரவுத்தளத்திற்காக செலவிடப்பட்ட தொகையைத் திரும்பப் பெறுவதற்கும் தேவையான சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் நிறுவனம்சார் விசாரணை ஒன்றை நடத்துதல்.	

III.இந்த தரவுத்தளத்தை பராமரிப்பதற்கு பொறுப்பான ஒரு அதிகாரிகயை நியமித்தல்.	2025.05.07 ஆம் திகதி அன்று தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைக்கு நியமிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்ப அதிகாரி (உதவி பணிப்பாளர்) இந்தத் தரவுத்தளத்தை பராமரிப்பதில் தொடர்ந்து பணியாற்றுவார்.
IV. தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை, மருத்துவ விநியோகப் பிரிவு மற்றும் அரச மருந்துகள் கூட்டுத்தாபனம் ஆகிய அனைத்து நிறுவனங்களையும் ஒருங்கிணைத்து டிஜிட்டல் பொருளாதா விவகார அமைச்சின் வழிகாட்டுதலின் கீழ் ஒரே தரவுத்தளமாக உருவாக்கப்படுவதன் முக்கியத்துவம் குறித்து குழு கவனம் செலுத்தியது புதிய தரவுத்தளம் தொடர்பான எதிர்கால நடவடிக்கைகள் குறித்து பிரதம கணக்கியல் அதிகாரி டிஜிட்டல் பொருளாதார விவகார அமைச்சின் செயலாளருடன் ஒருங்கிணைந்து அந்த அமைச்சிடமிருந்து ஆலோசனைகளைப் பெறுவார்.	தரவுத்தளம் (Data System) தொடர்பாக டிஜிட்டல் பொருளாதார அமைச்சுடன் கலந்துரையாடல் நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை விடுக்கப்பட்டதைத் தொடர்ந்து ஒப்புதல் அளிக்கப்பட்டது.. அதன்படி, உரிய நேரத்தில் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். .
4.1 பதிவு தள்ளுபடி கடிதங்களை வழங்குதல் (WOR). I. NMRA இல் பதிவுசெய்யப்பட்ட கொள்வனவு செயல்பாட்டின் போது பொதுத் துறைக்கு மருந்து களை வழங்காத பதிவு செய்யப்பட்ட விநியோகஸ்தர் கள் அதாவது தனியார் துறைக்கு மாத்திரம் மருந்து களை வழங்குபவர்களுக்கு எதிராக சட்டப்பூர்வ நடவடிக்கை எடுப்பதற்கு சட்டம்/விதிமுறைகளில் திருத்தம் செய்தல்,	தற்போது, மருந்துப் பதிவு தள்ளுபடி கடிதங்கள் (WOR) சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து விண்ணப்பங்களுக்கும் தள்ளுபடி கடிதங்களை வழங்கும் பணி முடிவடைந்துள்ளது. மேலும், அத்தகைய கடிதங்கள் மருத்துவ அதிகாரிகள் மற்றும் மருந்து மதிப்பீட்டு அலுவலர்கள் அடங்கிய குழுவின் ஒப்புதலுடன் மாத்திரமே முறையான மற்றும் வெளிப்படைத்தன்மையுடன் வழங்கப்படுகின்றன. இந்த நோக்கத்திற்காக சுகாதார அமைச்சினால் பரிந்துரைக்கப்பட்ட விண்ணப்பங்கள் மாத்திரமே குழுவின் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு சட்டத்தில் திருத்தம் செய்வதற்கான வரைவுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன
II.WOR வழங்குவதற்கான விதிகளைப் பயன்படுத்தி மருந்துகள் மாஃபியாவைக் கட்டுப்படுத்த சட்டத்தை திருத்துவதன் மூலம் தேவையான தலையீடுகளை மேற்கொள்ளுதல்.	

III. தரமற்ற மருந்துகள் குறித்து விசாரணைகளை நடத்தி, அத்தகைய தரமற்ற மருந்துகளை இறக்குமதி செய்யும் பதிவு செய்யப்பட்ட விநியோகஸ்தர்களுக்கு எதிராக தேவையான நடவடிக்கை எடுத்தல் மற்றும் அத்தகைய விநியோகஸ்தர்களை கருப்பு பட்டியலில் சேர்த்தல்.	மருந்துகளால் ஏற்படும் பக்க விளைவுகள் அல்லது ஒவ்வாமை எதிர்விளைவுகள் குறித்து தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையில் நிறுவப்பட்ட SAFRAC குழுவிற்கு தெரிவிக்கப்படுகின்றது. விசேட வைத்திய அதிகாரிகள் மற்றும் மருந்து மதிப்பீட்டு உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய குழு தற்போது இந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது. கடுமையான பக்கவிளைவுகள் இருப்பதாக சந்தேகிக்கப்படும் சந்தர்ப்பங்களில், மருந்துப் பயன்பாட்டை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு குழு உடனடியாக மருத்துவ விநியோகப் பிரிவுக்குத் தெரிவிக்கிறது. மேலும், தேவைப்பட்டால், மேலதிக பரிசோதனைக்காக மருந்தை ஆய்வுகூடத்திற்கு அனுப்புகிறது.
IV.நிறுவனத்தின் நிதியைப் பயன்படுத்தி நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படும் அனைத்து மருந்துகளையும் பரிசோதிப்பதற்கான ஆய்வுகூடத்தை நிர்மாணிப்பதற் கான சாத்தியக்கூறுகளை ஆராய்தல்.	தர உறுதி ஆய்வுகூடம் தற்போது புதுப்பிக்கப்பட்டு வருகிறது. மேற்கூரையை சீரமைக்கும் பணி இறுதி கட்டத்தில் உள்ளது. எதிர்கால கொள்வனவு நடவடிக்கைகளுக்காக அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் தேசிய மருந்துகள் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் ரூ. 1 பில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் இது தொடர்பில் பின்வரும் பகுதிகளில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் அனுசரணையை பெற்றுக்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. • ஆய்வுகூடத்தை மேம்படுத்துவது தொடர்பான ஆலோசனை சேவைகளை வழங்குவதில் பங்களிப்பு செய்தல். • ஆய்வுகூடக் கடமைகளுடன் தொடர்புடைய குறிப்பிட்ட விஷேட பயிற்சி வாய்ப்புகளை வழங்குதல் ஆய்வுகூடத்தின் சோதனை திறனை மேம்படுத்துவதற்காக, மருந்து மாதிரிகளை ITI, SLSI மற்றும் SLINTEC ஆய்வுகூடங்களுக்கு பரிசோதனைக்காக அனுப்ப ஒப்பந்தங்கள் எட்டப்பட்டுள்ளன...
V. மேற்படி விடயங்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் உள்ளடங்களாக, கணக்காய்வாளர் நாயகத்திற்கு பிரதிகளுடன் <u>**01 மாதத்திற்குள்**</u> குழுவிற்கு அறிக்கையை சமர்ப்பித்தல்,	• சுகாதார அமைச்சின் பரிந்துரைகளுடன் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை யிடம் சமர்ப்பிக்கப்படும் கோரிக்கைகளை தொடர்புடைய பிரிவின் தலைவரின் மேற்பார்வை யின் கீழ் ஆவணப்படுத்தப்பட்டு அவற்றை WOR குழுவிடம் சமர்ப்பித்தல். • WOR கோரிக்கையுடன் கட்டாயமாக சமர்ப்பிக்கப்பட வேண்டிய தொழில்நுட்ப அறிக்கைகள் பற்றிய அறிவித்தல். • WOR குழுவால் பரிசீலிக்கப்பட வேண்டிய அளவுகோல்களைத் (criteria) தீர்மானித்தல்

	• WOR குழுவால் அங்கீகரிக்கப்பட்ட WOR சம்பந்தப்பட்டவற்றுக்கு மாத்திரமே சான்றிதழ் களை வழங்குதல் • WOR சான்றிதழின் கீழ் இறக்குமதி செய்யப்படும் மருந்துகளின் உற்பத்தி, பாதுகாப்பு மற்றும் தரத்திற்கு தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை பொறுப்பல்ல என்று கூறும் ஷரத்தினை டிசம்பர் 2023 க்குள் சான்றிதழிலிருந்து நீக்குதல். • கவனிக்க முடியாத பாதுகாப்பு அம்சங்களை உள்ளடக்கிய ஒரு சிறப்புத் தாளில் WOR சான்றிதழ்களை அச்சிடுதல். • சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு தபால் மூலம் உரிய பிரதிகளை அனுப்புதல் • WOR வழங்குவது தொடர்பான ஆவணங்களை முறையாகப் பராமரித்தல்.
4.2(அ) தேசிய சிறப்பு பாதை முறைமையைப் பயன் படுத்தி தரப் பரிசோதனையின்றி நாட்டிற்குள் மருந்துகளை இறக்குமதி செய்தல். I. இந்தப் பிரச்சினை தொடர்பான உண்மைகளை விசாரிக்க நிறுவனத்தின் முன்னாள் பிரதம நிர்வாக அதிகாரி (CEO) மற்றும் குழுவின் முன்னாள் உறுப்பினர்கள் குழுவின் முன் வரவழைத்தல். (அந்த அதிகாரிகள் 2025.03.26 ஆம் திகதி அன்று குழுவின் முன் அழைக்கப்பட்டு உண்மைகள் குறித்து விசாரிக்கப்பட்டனர்)	(அந்த அதிகாரிகள் 2025.03.26 ஆம் திகதி அன்று குழுவின் முன் வரவழைக்கப்பட்டு உண்மைகள் குறித்து விசாரிக்கப்பட்டனர்)
II. WOR வழங்குவதற்கான சாதாரண நடைமுறைக்குப் புறம்பாக விஷேட நடைமுறையொன்றின் ஊடாக மருந்துகளை இறக்குமதி செய்வதற்கான அனுமதி வழங்கப்பட்டதன் காரணமாக நாட்டிற்குள் தரமற்ற மருந்துகள இறக்குமதி செய்யப்படுவதனால் ஏற்பட்ட சேதங்களுக்குப் பொறுப்பான அதிகாரிகள் மற்றும் அதற்கு வழிவகுத்த சூழ்நிலைகள் பற்றிய தகவல்கள்	பதிவு செயல்முறை ரத்து, இப்போது மருத்துவ அதிகாரிகள் மற்றும் மருந்து மதிப்பீட்டு அதிகாரிகள் அடங்கிய குழுவின் பரிந்துரையின் பேரில் மாத்திரமே மேற்கொள்ளப்படுகிறது. அதற்காக சுகாதார அமைச்சின் பரிந்துரையுடன் கூடிய விண்ணப்பங்கள் மாத்திரமே குழுவின் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். இது தற்போது பிரதம. கணக்காய்வாளர் நாயகத்தின் சிபாரிசுகளுக்கு அமைவாக, சுயாதீனமான மற்றும் பக்கச்சார்பற்ற குழுவொன்றின் ஊடாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. குழுவின் ஒப்புதல் இல்லாமல் பிரதம நிர்வாக அதிகாரி (Chief Executive Office) பதிவு தள்ளுபடி (WOR) கடிதங்களை வழங்க மாட்டார். விஷேட வழிமுறையைப் (Special pathway)

அடங்கிய விரிவான அறிக்கையை <u>01 மாதத்திற்குள்</u> கணக்காய்வாளர் நாயகத்திற்கு பிரதிகளுடன் குழுவிடம் சமர்ப்பித்தல்.	பயன்படுத்தி நாட்டிற்குள் தரமற்ற மருந்துகளை இறக்குமதி செய்வது தொடர்பான அறிக்கையானது எனது CA/AQ/FCC02/COPE/NMRA/2025(II) எனும் இலக்க 2025.07.22 திகதி அன்று சமர்ப்பிக்கப்பட்ட பதில் அறிக்கையின் இணைப்பு 02ன் ஊடாக பொது நிறுவனங்கள் குழுவின் செயலாளர் மற்றும் கணக்காய்வாளர் நாயகத்திற்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
(ஆ) டிசம்பர் 2022 இல் அதிகாரசபையால் கோரப் படாத முன்மொழிவுகள் (unsolicited proposals) மூலம் சமர்ப்பிக்கப்பட்ட 38 மருந்துப் பொருட்களினை இறக்குமதி செய்வதற்காக சவோரைட் (Savorite) என்ற நிறுவனத்திற்கு 38 பதிவு விலக்கு சான்றிதழ்கள் (Registration exemption certificates) வழங்கப்பட்டன இருப்பினும், தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை தொடர்புடைய மருந்துகளின் எந்த மதிப்பீட்டையும் நடத்தவில்லை. என்பதை குழு உன்னிப்பாகக் கவனித்தது. இதன் விளைவாக, அதிகாரசபை தனது பொறுப்பில் இருந்து விலகியுள்ளது. இதனால், சம்பந்தப்பட்ட மருந்துகளின் தரம், பாதுகாப்பு, மற்றும் செயல்திறன் (Quality, Safety, and Efficacy) ஆகியவற்றுக்கு அதிகாரசபை பொறுப்பல்ல என்றும், அந்தப் பொறுப்பை மருத்துவ விநியோகப் பிரிவின் பணிப்பாளரே ஏற்க வேண்டும் என்றும் கூறி, அதிகாரசபை தனது பொறுப்பிலிருந்து விலகியுள்ளது. I. சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் உள்ளூர் பிரதிநிதி பற்றிய தகவல்களை கணக்காய்வாளர் நாயகத்திற்கு பிரதிகளுடன் குழுவிடம் சமர்ப்பித்தல்,	உள்ளூர் பிரதிநிதிகள் பற்றிய எந்த தகவல்களும் பதிவு செய்யப்படவில்லை.

II. 323 மருந்துகளை இறக்குமதி செய்ததால் ஏற்பட்ட மொத்த நட்டம் குறித்து விசாரணை நடத்தி, 01 மாதத்திற்குள் குழுவிடம் அறிக்கை சமர்ப்பித்து, அதன் பிரதிகளை கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பித்தல்.	இது தொடர்பாக விசாரணை நடைபெற்று வருகிறது.
III. சட்டத்தின் பலவீனங்களை நிவர்த்தி செய்வது தொடர்பான காரணிகளைக் கருத்தில் கொள்ளுதல்.	சட்டத்தின் பலவீனங்களைத் களைவதற்காக தொடர்புடைய காரணிகளைக் கருத்தில் கொண்டு உற்பத்தி, பாதுகாப்பு மற்றும் தரத்திற்கு எந்தப் பொறுப்பும் இல்லை என்று கூறும் ஷரத்து டிசம்பர் 2023 ஆம் ஆண்டளவில் சான்றிதழிலிருந்து நீக்கப்பட்டுள்ளது.
06. மருந்துகள் மற்றும் உபகரணங்களை இறக்குமதி செய்தல். I. இந்த அமைச்சரவை பத்திதத்தை தயாரிக்கும் போது நாட்டில் மருந்துப் பொருட்களுக்கு பாரிய தட்டுப்பாடு இருந்ததையும், அது மருத்துவ விநியோகப் பிரிவின் தரவுத்தளத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதையும் அதனை உறுதிப்படுத்தும் வகையில் <u>01 மாத காலத்திற்குள்</u> அது தொடர்பான ஆவணங்களை குழுவிடம் சமர்ப்பித்தல்.	வழங்கப்பட்ட குழுவின் பரிந்துரை தொடர்பான தகவல்களை உள்ளடங்கியதாக அப்போதைய அரச மருந்து உற்பத்தி, விநியோகம் மற்றும் ஒழுங்குபடுத்தல் அமைச்சின் மேலதிக செயலாளர் திரு. ஆர்.எம்.எஸ்.கே. ரத்நாயக்க அவர்களால் தயாரிக்கப்பட்ட அறிக்கை, CA/AQ/FCC02/COPE/NMRA/2025(II) எனும் இலக்கமுடைய 2025.07.22 ஆம் திகதி அன்று சமர்ப்பிக்கப்பட்ட எனது பதில் அறிக்கையின் இணைப்பு 01 இன் மூலம் பொதுக் கணக்குகள் குழுவின் பொது நிறுவனங்களுக்கான குழுவின் செயலாளருக்கும், கணக்காய்வாளர் நாயகத்திற்கும் அனுப்பப்பட்டுள்ளது.
II. இந்த அமைச்சரவைப் பத்திரத்தைத் தயாரிப்பதற்கு தொடர்புடைய தகவல்களை வழங்கிய அதிகாரி மற்றும் அமைச்சரவைப் பத்திரத்தைத் தயாரித்த அதிகாரி ஆகியோரின் விவரங்கள் உள்ளடங்களாக அமைச்சரவைப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களின் உண்மைத் தன்மையை சரிபார்ப்பதற்கு பொருத்தமான தகவல்களைக் கொண்ட ஒரு அறிக்கையை <u>01 மாத காலத்திற்குள்</u> குழுவிடம் சமர்ப்பித்தல்.	இந்த அமைச்சரவை விஞ்ஞாபனத்தை தயாரித்தல் பணி, அப்போதைய அரச மருந்து உற்பத்தி, விநியோகம் மற்றும் ஒழுங்குபடுத்தல் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டு, அமைச்சரவையின் ஒப்புதலுக்காக சமர்ப்பிப்பதற்காக சுகாதார அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்தச் செயற்பாட்டின் போது "அமைச்சரவைக்கு அமைச்சரவை விஞ்ஞாபனத்தை சமர்ப்பிப்பதற்கான படிவம்" என்ற தலைப்பில் உள்ள படிவத்துடன் இது இணைக்கப்பட வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்ட படிவம், எனது CA/AQ/FCC02/COPE/NMRA/2025(II) எனும் இலக்கமுடைய 2025.07.22 ஆம் திகதி அன்று சமர்ப்பிக்கப்பட்ட பதில் அறிக்கையின் இணைப்பு 02 இன் மூலம் பொது நிறுவனங்களுக்கான குழுவின் செயலாளர் மற்றும் கணக்காய்வாளர் நாயகம் ஆகியோருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

08. விஷேட வழிமுறை (Special pathway) ஊடாக மருந்துகளை இறக்குமதி செய்தல். பிரதம நிறைவேற்று அதிகாரி தனது உத்தியோகபூர்வ மின்னஞ்சல் முகவரியைப் பயன்படுத்தி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிய கடிதத்தை குழுவிற்கு 02 வாரங்களுக்குள் சமர்ப்பித்தல்.	விஷேட வழிமுறையைப் (Special pathway) பயன்படுத்தி மருந்துகளை இறக்குமதி செய்யும் செயல்பாட்டில், தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் பிரதம நிர்வாக அதிகாரி தனது அதிகாரப்பூர்வ மின்னஞ்சல் முகவரியைப் பயன்படுத்தி அமைச்சு செயலாளருக்கு அனுப்பிய கடிதம், CA/AQ/FCC02/COPE/NMRA/2025(II) எனும் இலக்கமுடைய 2025.07.22 ஆம் திகதி அன்று சமர்ப்பிக்கப்பட்ட எனது பதில் அறிக்கையின் இணைப்பு 03 இன் மூலம் பொது நிறுவனங்களுக்கான குழுவின் செயலாளர் மற்றும் கணக்காய்வாளர் நாயகம் ஆகியோருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

……………………………………

டாக்டர் நளிந்த ஜயதிஸ்ஸ.

சுகாதாரம் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர்.